1979 மார்ச் 17]

கலசப்பாக்கம் பகுதியில் குடிநீர் வழங்கு திட்டங்கள்.

* வினா எண் 447—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த வீரளூர் ஊராட்சி, சிறுவள்ளூர் ஊராட்சி, கேட்டவரம்பாளையம் ஊராட்சி ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் சார்பில் அல்லது குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) அதற்கான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டம் பரிசிலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வி அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது. அமைச்சர் பதிலிலிருந்து இதுவரை அனுமதிக்கப்படவில்லை என்று அறிந்து கொள்கிறேன். அந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா? எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? அது எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாபெரும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள மூன்று ஊராட்சிகளும் 'டைப் சிக்ஸ்' 6-வது பிரிவின்கீழ் வருகின்றன. அதாவது குடிநீர் எப்பொதும் உள்ள கிராமங்கள் என்ற தலைப்பில் வருகின்றன. இருப்பினும் அங்கே மேற்கூறிய 3 ஊராட்சிகளும் நிரந்தர அடிப்படையில் குடிதண்ணீர் வழங்கும் திட்டததிற்கு ரூ. 14,500 செலவில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட 1976-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்புதல் அளிக்கபட்டிருக்கிறது. 3 ஊராட்சிகளும் இந்த ஆய்வுத் தொகையை வாரியத்திற்கு செலுத்தியுள்ளன. இத்திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முழுமையாக முடிவுற்று, திட்ட மதிப்பீடும் தயார் செய்யப்பட்டுள்ளது. வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் 'முன் வைப்புத் திட்டம்' 'டெபாசிட் ஸ்கீம் ஓர்க்ஸ்'—என்ற அடிப்படையில் இவ்வேலையை செயல்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

[1979 மார்ச் 17

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இது வரையில் 'ரூரல், அர்பன்' என்ற இரண்டு திட்டங்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாரியத்திலிருந்து அனுப்பியுள்ள புத்தகத்தில் இருக்கின்றன. இப்போது ''டெபாசிட் திட்டம்'' என்று ஒன்றை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். டெபாசிட் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டால், அந்தத் தொகையை ஊரட்சிகள் திருப்பிச் செலுத்த வேண்டுமா? திருப்பி செலுத்தக் கூடிய சக்தி ஊராட்சிகளுக்கு இருக்கிறதா என்பதை யார் சொல்வது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் முன் வைப்புத் தொகை டெபாசிட் ஸ்கீம் ஒர்க்ஸ் செயலாற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்திருக்கிற காரணத்தால், அந்த ஊராட்சிகளே இதை டெபாசிட் ஸ்கீம் ஒர்க்ஸாக எடுத்துக் கொள்ள ஒப்புக்கொண்டுள்ளன என்பது 'இம்பிளைடு மீனிங்' என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில்சொல்லும்போது எல்லோரையும் மாண்புமிகு உறுப்பினர் என்று அழைக்கும்போது தற்போது தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்கள் மாண்புமிகு மாபெரும் உறுப்பினர் என்று பாகுபடுத்தி கூறினார்கள். ஏன் அப்படி கூறினார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு வேளை திருவேங்கடம் அவர்கள் கொஞ்சம் மாபெரும் 'சைஸ்' ஆக இருப்பதால் அப்படி சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10·10.)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அமைச்சரவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் டெபாசிட் ஸ்கீம் என்று வருகிற போது அந்தப் பணத்தை எவ்வாறு செலுத்த வேண்டும் என்பது தான். கடன் அடிப்படையிலே வருகிறதா அதற்கு வட்டி உண்டா? வட்டி இல்லையா? அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு சக்தி இருக்கிறது என்று யார் சொல்வது என்பதைத்தான் நான் கேட்டேன். அதற்குத் தாங்கள் பதிலளிக்கவில்லை. அதற்கு பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்த டெப்பாசிட் ஓர்க் என்பதன் படி பணத்தை அவர்கள் கட்டிவிடுகிறார்கள். (Execution side of it) பணத்தைக் கட்டினால் தான் எழும். இதுதான் நான் அறிந்துள்ள பொருளாகும். டெப்பாசிட் கட்டி விடுகிறார்கள் என்பது தான் அதன் பொருள்.

கும்பகோணத்தில் அரிசன நலத்துறைக்கு நில ஆர்ஜிதம்.

* வினா எண். 448—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் 25 வீடுகள் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) வீடுகள் இல்லையென தவறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) கும்பகோணம் நகரத்தில் அரிசன நலத்துறைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள இடத்தில் பிரிவு 4(1) அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு எழுப்பப்பட்டுள்ள 22 கட்டிடங்கள் (19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளும்) மட்டுமே இருப்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) தீர்ப்பினை வழங்கு முன்பு உரிமை பெறும் நிலங்களை பார்வையிடும்பொழுது, இந்நிலங்களில் 19 வீடுகளும் 3 மாட்டுக் கொட்டகைகளுமாக மொத்தம் 22 கட்டிடங்கள் இருந்தன. இக்கட்டிடங்களிலுள்ளோர் வெளியேறிய பின்னர் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கி 6–10–78-ல் நிலங்கள் கையகப் படுத்தப்பட்டுள்ளன. எனவே மாறான தகவலுடன் அந்த இடம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. ஆகவே இதனை அரசு பரிசீலனை செய்யத் தேவையில்லை.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரிசன மக்களுக்கென்று நில ஆர்ஜிதம் செய்யப்படுவதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. அப்படி ஆர்ஜிதம் செய்த நிலங்களை உடனடியாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் இந்த